# காலத்திற்கு ஒரு கவிஞன், கருத்துக்குப் பெருங் கவிஞன்!



கோவை உலா அந்தாதி
கோலமிலாத் தலபுராணம்
மாவைநன்கு
அரைப்பதுபோல்
மறுபடியும்
மறுபடியும்
தேவையிலாப் பொருள்பற்றித்
தெவிட்டுகின்ற
கற்பனைகள்,
பூவிதழ் அன்றன்றும்
பூத்தழகாய்த் தெரிவதுபோல்
பாவைத்தான் எழுதாமல்
பரம்பொருளும் அவர்அருளும்
பாவமும் புண்ணியமும்
பலபிறவி மாயைகளும்
பாவலர்கள் பாட்டெழுதிப்
பழையவழி போனகாலம்!

நோவைத்தான் மக்களின்
நொடியைத்தான்
போவத்தான் வைப்பதற்குப்
புதுவழி தேடியே
மேவத்தான் புரட்சியெண்ணம்
மிகவேகப் பாட்டெழதிக்
கூவத்தான் முடியாமல்
கூழுந்தான் கிடைக்காமல்
சாவத்தான் கிடந்தோரை,
சல்லடை ஆனோரை

ஏவத்தான் வந்தவர்
எழுச்சியைத் தந்தவர்
தூவத்தான் கருத்தென்னும்
துளிர்க்கின்ற விதைகளை
ஆவலால் எழுந்தவர்
ஆகாதெனும் அறியாமை
கேவலம் என்றுரைத்துக்
கிளர்ச்சிதரும் பாக்களைத்
தீவலம் செய்வதுபோல்
செந்தமிழில் ஏற்றியவர்;
பூவலம் வருவதுபோல்
போர்க்களம் புகுவதுபோல்
மாவளம் மிகவேண்டி
மக்களைத் தூண்டியவர்!
கோஇலா நாட்டில் பாக்
கோவாக மிளிர்ந்தவர்
மூவேந்தர்
மிடுக்குதான்
முகத்திலே பொலிந்திடப்
பாவேந்தர் ஆனவர்,
பாரதி தாசனவர்!

இந்திய விடுதலையை
எல்லோர்க்கும் உணர்த்திட
முந்திய பாரதியை
முன்ஏராய்க் கொண்டாலும்
சிந்தனை வேறாகத்
திகழ்ந்தவர்,
திராவிடம்
முந்திய காலத்து
முதன்மைபெற
முகிழ்த்தவர்!

மந்தநிலை மக்களிடம் மண்டிய
அறியாமை
சொந்தநிலை
உணராத
துயர்மடைமை மூடநிலை
கந்தையும் கிடைக்காமல்
கடவுளெனக் கிடந்தநிலை
மொந்தைக்கூழ் குடிக்கவும்
மொய்த்திருந்த பசித்தநிலை
பொந்தாக, புதராகப்
புறமெலாம்
சூழ்ந்திருக்க
வந்துபெருந் துயரளிக்க
வண்டமிழ் நாட்டிலே
இந்தநிலை மாற்றுவதே
இன்றைய தேவையெனச்
சிந்தித்துத் தோன்றிய
சீர்திருத்த இயக்கத்தின்
கொந்தளித்த கருத்துகள்
குமுறிட உள்ளத்தில்
செந்தழலாய் மாறியவர்;
செந்தமிழில் ஊறியவர்!
வந்தெழுந்த எண்ணங்கள்
வார்த்தெடுத்த
கலன்களை
வெந்தழல் ஓங்கிட
வேதனை தீர்ந்திடத்
தந்தவர் பாரதி
தாசனெனச் சாற்றுவோம்
கந்தகம்போல் புரட்சிக்
கவிஞரெனப் போற்றுவோம்!

இருட்டறையில் உள்ளதடா
உலகமென்று எழுச்சிகொள்
ஒருபாட்டால் தமிழ்நாட்டை
உலுக்கியவர்; ஊர்தோறும்
தெருத்தோறும் வீடுதோறும்
சீற்றத்தைக் கிளப்பியதால்
உருவான மாற்றங்கள்
ஒன்றல்ல, இரண்டல்ல!
பெருங்கொடுஞ்
சாதிமதம்
பேயாட்டம் போடுவதைக்
கருவறுக்க வேண்டுமென்றும்
காலமெலாம் சொத்துகளைச்
சுருட்டுகின்ற பேர்களைத்
தொலைத்திட வேண்டுமென்றும்
இருட்டொழிக்கும்
பேரொளியாய்
எழுவது பகுத்தறிவுப்
புரட்சியென்று
பாடியவர்
புத்துலகம் தேடியவர்
திரட்சியாய் உள்ளபல
தீமைகளை, கேடுகளை
விரட்டினால் மட்டுமே
விளைந்திடும் வளமென்றார்
மிரட்டுவோர் தமையெதிர்த்து
மேவுக களமென்றார்!

**பேராசிரியர்**
**மா.செல்வராசன்**

உரிமையெனும்
உணர்ச்சியை
உடையவராய்த் தமிழர்கள்
சரிநிகர் சமமாகத்
தலைநிமிர்ந்து
வாழ்வதற்குப்
பரியோட்டப் பாடல்கள்
பன்னூறு புனைந்தவர்
கரிகாலன் குட்டுவன்
கழல்மாறன் நினைந்தவர்
நரியான வடவர்கள்
நண்ணாமல் விரட்டுவதே
சரியான வேலையென்றார்
தமிழ்நாடு சோலையென்றார்
புரியாத குரங்கோட்டப்
புறமெடுங்கள்
கோலையென்றார்!

தமிழாய்ந்த தமிழன்தான்
தமிழ்நாட்டை ஆளுதற்கு
அமைந்தவன் என்றிவர்
அன்றேதான் பாடியவர்
தமைமறந்து சிலநேரம்
தான்தோன்றித் தனமாக
இமைமூடி விடுகின்றார்
எவர்எவரோ ஆளுதற்கு
நமையண்டி வருகின்றார்
நாற்காலி பற்றுதற்குச்
சுமைசுமையாய்ப் பொய்கூறிச்
சுற்றியே திரிகின்றார்
சமயந்தான் இதுவென்று
சந்துவழி நுழைகின்றார்!

இமயத்தை வென்றவர்கள்
இனமானம் உயர்ந்தவர்கள்
தமர்அன்றிப் பிறர்வரின்
தடுத்தெழுவர்
தலைநிமிர்வர்
அமர்எனினும்
கொஞ்சமும்
அஞ்சாமல் வெல்லுவர்
திமிலுயர்ந்த ஏறுகளாய்த்
திறலுடன் செல்லுவர்!

தமிழர்கள் ஒருபோதும்
தலைகுனியார்
தாழ்ந்திடார்!
இமிழ்கடல்சூழ் தமிழ்நாடு
என்றைக்கும் தனித்திருக்கும்
தமிழரன்றி அயலவர்
தாள்வைக்க ஒழித்திருக்கும்!
குமிழிகள் அல்ல; அவர்
குன்றுகள், மோதினால்
உமியாவார் எதிரிகள்,
உருவில்லா உதிரிகள்!
கமழ்கவே இவ்வெண்ணம்
காலமெலாம் தமிழரிடம்!
சமுதாயப் பாவேந்தன்
தலைமுறைக்கும்
கோவேந்தன்
அமுதமாய்ப் பாடல்கள்
அளித்தவொரு மாவேந்தன்!

செந்தமிழ்க்குத்
தீமையெனின்
தீயாக எழுந்தவர்,
எந்தமொழி என்றாலும்
ஏலாதென்று உரைத்தவர்;
இந்திமொழி
என்றாலோ
இமயம்வரை விரட்டுகெனச்
சிந்துபல பாடியவர்
சிறுமையெனச் சாடியவர்!

சந்துபல கண்டது
தாள்வைக்க முயன்றிடின்
முந்தியே தடுத்திட
மூலையில் விடுத்திடச்
சந்திப்போம் போரென்றார்
தடந்தோள்கள் கோடியென்றார்!
சிந்திப்போம் தமிழ்மொழியைத்
தீண்டவரும் எதுவெனினும்
கொந்தளிப்போம்
வெந்தழிப்போம்
கொள்கையது
வென்றெடுப்போம்!

பெரியாரும் அண்ணாவும்
கலைஞர்பே ராசிரியர்
இருந்தவர் நாவலர்
எல்லோரும்
திராவிடத்தின்
வருங்காலம் இவர்பாட்டில்
வண்டமிழாய் வாழுமெனப்
புரட்சியைப் போற்றினர்
புத்தெழுச்சித்
தளபதியும்
மருட்சியின்றி இவர்பாட்டை
மனங்கொண்டு
செல்கின்றார்;
மிரட்சிவரும் போதெல்லாம்
வெற்றிதரும் இவர்பாட்டு!
திரட்சியாய் இருக்கின்ற
திரியுள்ள அதிர்வேட்டு!

காலத்திற்கு ஒருகவிஞர்
காவிரி பாய்தமிழ்
ஞாலத்திற்கு என்றெழுந்த
நம்புரட்சிக் கவிஞரவர்
நீலத்து வானம்போல்
நிறைநீரின் நெடுங்கடல்போல்
மேலொத்த காற்றுப்பொல்
மீதெழும் தீயைப்போல்
காலத்தும் வாழ்கவே
கருத்தெழும் பிறந்தநாள்!

---

**திருமயம்- ஆலங்குடி- அறந்தாங்கி தொகுதிகளில்**

## வாக்களித்த பொதுமக்களுக்கும், உழைத்த உடன்பிறப்புகளுக்கும் நன்றி!

### புதுக்கோட்டை தெற்கு மாவட்டச் செயலாளர் - அமைச்சர் எஸ்.ரகுபதி அறிக்கை!



புதுக்கோட்ட, ஏப். 30 -

தமிழ்நாட்டின் உரிமைகளை மீட்டெடுக்கவும், மாநிலத்தின் வளர்ச்சி, முன்னேற்றம் மற்றும் சமூக நல்லிணக்கத்தைப் பாதுகாக்கவும் உறுதுணையாக நின்று, மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணி வேட்பாளர்களுக்கு வாக்களித்த பொதுமக்களுக்கு புதுக்கோட்டை தெற்கு மாவட்ட கழக செயலாளர் இயற்கை வளங்கள் துறை அமைச்சர் எஸ்.ரகுபதி தனது நன்றியைத் தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது:

“நடைபெற்று முடிந்த சட்டமன்றத் தேர்தலில்,

மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணியின் சார்பில் திருமயம் சட்டமன்ற தொகுதியில் கழக வேட்பாளராக போட்டியிட்ட நான் (எஸ்.ரகுபதி) வெற்றியின் சின்னமான உதயசூரியன் சின்னத்தில் போட்டியிட்டேன். ஆலங்குடி சட்டமன்றத் தொகுதியில் கழக வேட்பாளராக உதயசூரியன் சின்னத்தில் அமைச்சர் சிவ.வீ.மெய்யநாதன்போட்டியிட்டார். அறந்தாங்கி சட்டமன்ற தொகுதியில் காங்கிரஸ் சார்பில் எஸ்.டி.ராமச்சந்திரன் கை சின்னத்தில் போட்டியிட்டார்.

3 வெற்றி வேட்பாளர்களுக்கும் வாக்குகள் அளித்துள்ள வாக்காளப் பெருமக்கள் அனைவருக்கும் எனது மன மார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மேலும், தேர்தல் களத்தில் வெற்றி ஒன்றையே இலக்காகக் கொண்டு, பசி, தூக்கம் பாராமல் அயராது உழைத்த கழக நிர்வாகிகள், தொண்டர்கள் மற்றும் கூட்டணிக் கட்சிகளின் அனைத்துப் பொறுப்பாளர்களுக்கும், தோழர்களுக்கும் எனது அன்பையும், நன்றியையும் உரித்தாக்குகிறேன். இவ்வாறு புதுக்கோட்டை தெற்கு மாவட்டக் கழக செயலாளர், அமைச்சர் எஸ்.ரகுபதி தெரிவித்துள்ளார்.

---

**திருவள்ளூர் மத்திய மாவட்டத்தில் - 2 சட்டமன்றத் தொகுதிகளில்**

## கழக - கூட்டணி வேட்பாளர்களுக்காக தேர்தல் பணியாற்றிய நிர்வாகிகளுக்கு நன்றி!

### மாவட்டச் செயலாளர் - அமைச்சர் ஆவடி சா.மு.நாசர் அறிக்கை!

திருவள்ளூர் ஏப்ரல் 30 -

திருவள்ளூர் மத்திய மாவட்டத்தில் உள்ள ஆவடி மற்றும் பூவிருந்தவல்லி 2 சட்டமன்றத் தொகுதிகளில் போட்டியிட்ட கழக கூட்டணிக் கட்சிகளின் வேட்பாளர்களுக்காக இரவு பகல் பாராமல் தேர்தல் பணியாற்றிய கழக நிர்வாகிகள் மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணி கட்சி நிர்வாகிகள் அனைவருக்கும் திருவள்ளூர் மத்திய மாவட்ட தி.மு.க. சார்பில் கோடானுகோடி நன்றியை மாவட்டச் செயலாளர் அமைச்சர் ஆவடி சா.மு.நாசர் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவித்துக் கொண்டார்.

திருவள்ளூர் மத்திய மாவட்டத்தில் ஆவடி சட்டமன்றத் தொகுதியில் மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணிக் கட்சிகளின் சார்பில் (ஆவடி சா.மு. நாசர்) தி.மு. கழக வேட்பாளராக போட்டியிட்டேன். பூவிருந்தவல்லி சட்டமன்ற தொகுதியில் கழக வேட்பாளர் ஆ.கிருஷ்ணசாமி ஆகியோர் உதயசூரியன் சின்னத்தில் போட்டியிட்டோம் வெற்றிக்காக இரவு பகல் பாராமல் தேனீக்களை போல சுறுசுறுப்பாக பணியாற்றிய திருவள்ளூர் மத்திய மாவட்ட அடங்கிய தி.மு. கழக நிர்வாகிகள் மற்றும் கூட்டணிக் கட்சிகளின் நிர்வாகிகள் உள்ளிட்ட ஒட்டுமொத்த நிர்வாகிகள் அனைவருக்கும் என்னுடைய நெஞ்சில் நிறைந்த நன்றிகளை தெரிவித்து மகிழ்கிறேன்



அதேபோல் மாநில மாவட்ட கழக நிர்வாகிகள் மாநகர, ஒன்றிய, நகர, பகுதி, பேரூர் வார்டு, கிளைக் கழகச் செயலாளர்கள் மற்றும் நிர்வாகிகள், கழக அனைத்து அணிகளின் நிர்வாகிகள் மற்றும் மதசார்பற்ற கூட்டணிக் கட்சிகளின் ஒட்டுமொட்டு நிர்வா கிகள், கழகத்தில் எந்தவித பலனையும் எதிர்பார்க்காமல் இரவும் பகலும் பாராமல் அரும்பணியாற்றிய கழகத்தினர் உயிர் நலமான அடிமட்ட தொண்டர்கள் ஆவடி மற்றும் பூவிருந்தவல்லி தொகுதிகளில் வாக்காளர் உள்ளிட்ட அனைவருக்கும் திருவள்ளூர் மத்திய மாவட்ட தி.மு.க. சார்பில் கோடான கோடி நன்றிகளை தெரிவித்துக் கொள்கிறோம்.

இவ்வாறு அமைச்சர் ஆவடி சாமு நாசர் அறிக்கையில் கூறியுள்ளார்.

---

**புதுக்கோட்டை- விராலிமலை- கந்தர்வக்கோட்டை தொகுதிகளில்**

## வாக்களித்த பொதுமக்களுக்கும், உழைத்த உடன்பிறப்புகளுக்கும் நன்றி!

### புதுக்கோட்டை வடக்கு மாவட்டச் செயலாளர் கே.கே.செல்லப்பாண்டியன் அறிக்கை!



புதுக்கோட்டை, ஏப். 30 -

தமிழ்நாட்டின் உரிமைகளை மீட்டெடுக்கவும், மாநிலத்தின் வளர்ச்சி, முன்னேற்றம் மற்றும் சமூக நல்லிணக்கத்தைப் பாதுகாக்கவும் உறுதுணையாக நின்று, மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணி வேட்பாளர்களுக்கு வாக்களித்த பொதுமக்களுக்கு புதுக்கோட்டை வடக்கு மாவட்டக் கழகச் செயலாளர் கே.கே.செல்லப்பாண்டியன் தனது நன்றியைத் தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது:

“நடைபெற்று முடிந்த சட்டமன்றத் தேர்தலில், மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணியின் சார்பில் விராலிமலை சட்டமன்ற தொகுதியில் கழக வெற்றி வேட்பாளராக போட்டியிட்ட நான் (கே.கே.செல்லப்பாண்டியன்) வெற்றியின் சின்னமான உதயசூரியன் சின்னத்தில் போட்டியிட்டேன்.

புதுக்கோட்டை சட்டமன்றத் தொகுதியில் கழக வெற்றி வேட்பாளராக உதயசூரியன் சின்னத்தில் டாக்டர் வை.முத்துராஜா போட்டியிட்டார். கந்தர்வக்கோட்டை சட்டமன்றத் தொகுதியில் இந்திய கம்யூனிஸ்ட் மார்க்சிஸ்ட் சார்பில் எம்.சின்னத்துரை போட்டியிட்டார்.

3 வெற்றி வேட்பாளர்களுக்கும் வாக்குகள் அளித்துள்ள வாக்காளப் பெருமக்கள் அனைவருக்கும் எனது மன மார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மேலும், தேர்தல் களத்தில் வெற்றி ஒன்றையே இலக்காகக் கொண்டு, பசி, தூக்கம் பாராமல் அயராது உழைத்த கழக நிர்வாகிகள், தொண்டர்கள் மற்றும் கூட்டணி கட்சிகளின் அனைத்துப் பொறுப்பாளர்களுக்கும், தோழர்களுக்கும் எனது அன்பையும், நன்றியையும் உரித் தாக்குகிறேன்.

இவ்வாறு மாவட்டக் கழகச் செயலாளர் கே.கே. செல்லப்பாண்டியன் தெரிவித்துள்ளார்.

---

**கோவை வடக்கு மாவட்டம் - தொண்டாமுத்தூர் - மேட்டுப்பாளையம் - கவுண்டம்பாளையம் சட்டமன்ற தொகுதிகளில்**

## தேர்தல் பணியாற்றிய கழக - கூட்டணிக் கட்சிகளின் நிர்வாகிகளுக்கு நன்றி!

### கோவை வடக்கு மாவட்டக் கழகச் செயலாளர் தொண்டாமுத்தூர் அ.ரவி அறிக்கை!

கோவை, ஏப். 30 -

கோவை வடக்கு மாவட்டம் தொண்டாமுத்தூர் மேட்டுப்பாளையம் கவுண்டம்பாளையம் சட்டமன்ற தொகுதிகளில் தேர்தல் பணியாற்றிய தி.மு.க. மற்றும் கூட்டணி கட்சி நிர்வாகிகளுக்கு கோவை வடக்கு மாவட்டக் கழகச் செயலாளர் தொண்டாமுத்தூர் அ.ரவி தனது நெஞ்சார்ந்த நன்றியை தெரிவித்துள் ளார்.

இது குறித்து கோவை வடக்கு மாவட்டக் கழகச் செயலாளர் தொண்டாமுத்தூர் அ.ரவி விடுத்துள்ள அறிக்கை வருமாறு :

கோவை வடக்கு மாவட்டம் தொண்டாமுத்தூர் மேட்டுப்பாளையம் கவுண்டம்பாளையம் சட்டமன்றத் தொகுதிகளில் கழகத் தலைவர், தமிழ்நாடு முதலமைச்சர் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அவர்களின் தலைமையிலான மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணியின் சார்பில் தொண்டாமுத்தூர் சட்டமன்றத் தொகுதியில் கழக வேட்பாளராக “உதயசூரியன்” சின்னத்தில் என்.ஆர். கார்த்திகேயன், மேட்டுப்பாளையம் சட்டமன்றத் தொகுதியில் கழக வேட்பாளராக உதய சூரியன் சின்னத்தில் கவிதா கல்யாண சுந்தரம், இந்திய தேசிய காங்கிரஸ் சார்பில் கே. பி.சூர்யபிரகாஷ் “கை” சின்னத்தில் போட்டியிட்டனர்.



தொண்டாமுத்தூர் சட்டமன்றத் தொகுதி கழக வேட்பாளர் என்.ஆர். கார்த்திகேயன், மேட்டுப்பாளையம் சட்ட மன்றத் தொகுதி கழக வேட்பாளர் கவிதா கல்யாணசுந்தரம், இந்திய தேசிய காங்கிரஸ் கட்சி வேட்பாளர் கே. பி.சூர்ய பிரகாஷ் ஆகியோருக்காக கழகத் தலைவர், தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் தலைமையிலான திராவிட மாடல் ஆட்சியில் மேற் கொள்ளப்பட்ட திட்டங்களின் சாதனைகளை ஒவ்வொன்றாக வீடுகள் தோறும் எடுத்துக்கூறி கண் துஞ்சாது தேர்தல் பணி மேற்கொண்ட மாநில, மாவட்டக் கழக நிர்வாகிகள், ஒன்றிய, நகர, பகுதி, பேரூர் கழக, வார்டு கழக, கிளைகழகசெயலாளர்கள், பொறுப்பாளர்கள், நிர்வாகிகள் அனைத்து சார்பு அணிகளின் நிர்வாகிகள் மற்றும் மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணிக் கட்சிகளைச் சேர்ந்த நிர்வாகிகள், தோழர்கள் உள்ளிட்ட அனைவருக்கும் கழக மேற்கு மண்டல பொறுப்பாளர், முன்னாள் அமைச்சர் வி.செந்தில் பாலாஜி சார்பிலும், கோவை வடக்கு மாவட்ட கழகத்தின் சார்பிலும், மாவட்ட கழக செயலாளர் ஆகிய எனது சார்பிலும் எனது நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு கோவை வடக்கு மாவட்ட கழக செயலாளர் தொண்டாமுத்தூர் அ.ரவி தனது அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

---

## கோடைகாலத்திலும் வற்றாத ஏரி!

மன்னார்குடி , ஏப். 30 -

கோடைகாலத்திலும் ஏரியில் தண்ணீர் உள்ளதால், வடுவூர் பறவைகள் சரணாலயத்தில் 110 பறவை இனங்கள் வந்து குவிந்துள்ளன.

இதனால் சுற்றுலா பயணிகள் மகிழ்ச்சியடைந்துள்ளனர்.

திருவாரூர் மாவட்டம் மன்னார்குடி அடுத்த வடுவூரில் சுமார் 316 ஏக்கர் பரப்பளவில் பிரம்மாண்டமான ஏரி அமைந்துள்ளது.

இங்கு பாதுகாக்கப்பட்ட பறவைகள் சரணாலயமாக திகழும் இந்த சரணாலயம் ராம்சார் பட்டியலில் இடம் பெற்றுள்ளது. இந்த ஏரியைச் சுற்றி வளமான ஈர நிலங்கள் அதிக அளவில் உள்ளதால் ஆண்டு தோறும் நவம்பர், டிசம்பர், ஜனவரி, பிப்ரவரி மாதங்களில் உள்நாடு மற்றும் வெளிநாடுகளில் இருந்து பல்லாயிரக்கணக்கான பறவைகள் வந்து செல்கிறது.